**ஆண்டுக்கு ரூ 1 லட்சம் முத்தான லாபம் தரும் மூங்கில் !**



இடுபொருள் செலவு, வேலையாட்கள் தட்டுப்பாடு, தண்ணீர் தட்டுப்பாடு, குறைந்த வருமானம் ஆகிய பிரச்னைகளின் சுவடு கூட இல்லாமல் லாபகரமாக செய்யக் கூடிய ஒரு விவசாயமும் இருக்கிறது. அதுதான் மூங்கில் சாகுபடி.

வேறு ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து வருமானம் ஈட்டிக் கொண்டிருப்பவர்கள், தொழில்துறையில் வருமானம் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் என வெவ்வேறு காரணங்களால் நேரடியாக விவசாயத்தில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு மிகவும் ஏற்றப் பயிர் மூங்கில்.

'பார்ட் டைம் ஜாப்' என்பார்களே அதுபோல, 'பார்ட் டைம்' விவசாயிகளுக்குக் கைகொடுக்கும் ஒரு பயிர்தான் இந்த மூங்கில்.

ஒரு முறை நடவு செய்துவிட்டால்.. இரண்டு, மூன்று தலைமுறைக்கும் தொடர்ந்து வருமானம் தரும் நிரந்தரமான சொத்து இந்த மூங்கில். அதனால் தான் இதை 'பச்சைத் தங்கம்' எனக் கொண்டாடுகிறார்கள். இதில், முள், மூங்கில், முள் இல்லா மூங்கில் என இரண்டு வகை இருக்கிறது. முள் இல்லா மூங்கில் தான் வணிகரீதியிலான சாகுபடிக்கு ஏற்றது. பாம்புகள் அண்டாது, முள் இல்லா மூங்கில் பயிரிடப் பட்டிருக்கும் தோப்பில், சிறு குழந்தைக் கூட பயமில்லாமல் நடமாடலாம்.

சரி, வணிகரீதியாக மூங்கிலை எப்படி சாகுபடி செய்வது எனபதைப் பற்றிப் பார்க்கலாம்.!

15 அடிக்கு 15 அடி இடைவெளி!

செம்மண், இருமண்பாடு உள்ள நிலங்களில் சிறப்பாக வளரும். மற்ற வகை மண்ணாக இருந்தாலும், கவலைப்படத் தேவையில்லை. குழியெடுத்து, அதில் செம்மண், தொழுவுரம் இதையெல்லாம் இட்டு நடவு செய்தால்.. நன்றாக வளரும். நன்றாக உழவு செய்த நிலத்தில் 15 அடிக்கு 15 அடி இடைவெளியல் இரண்டு அடி நீளம், அகலம், ஆழத்தில் குழிகளையெடுத்து நடவு செய்ய வேண்டும். இப்படி நடவு செய்தால், ஏக்கருக்கு 200 கன்றுகள் வரை தேவைப்படும்.

ஒவ்வொரு குழியிலும் மண்புழு உரம் ஒரு கிலோ, வேர்வளர்ச்சி உட்பூசணம் 30 கிராம் (வேம்), மட்கிற தொழுவுரம் ஒரு கிலோ, அசோங்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா தலா 15 கிராம் ஆகியவற்றை போட்டு, 6 முதல் 12 மாத வயதுடையக் கன்றுகளை நடவேண்டும். குழிகளை மேல் மண்ணைக் கொண்டு நிரப்பி, மழைநீர் தேங்கி நிறக் வசதியாக பாத்தி எடுக்க வேண்டும். கன்றகளுக்கு இடையிலும் வாய்க்கால் எடுத்து, மழைநீரச் சேகரிக்கலாம். மழையில்லாத காலத்திலும், கோடைக் காலத்திலும் 15 நாடகளுக்கு ஒரு முறை நீர்பாய்ச்சுவது நல்லது. சொட்டு நீர்ப் பாசனம் அமைத்தால், அதிக மகசூல் கிடைக்கும். ஆரம்பத்தில் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். நன்றாக வளர்ந்து மரமானதும்.. அவ்வப்போது தண்ணீர் கொடுத்தால் போதும்.

இளம் கழிகறை வெட்டக் கூடாது!

தண்ணீர் வசதி இருப்பவர்கள்.. ஊடுபயிராக தட்டைப் பயறு, உளுந்து, கீரை, பூச்செடிகள், வாழை என நடவு செய்யலாம். நடவு செய்த ஓராண்டுக்குப் பிறகு, கன்றுகளைச் சுற்றி மண் அணைத்தால், புதியக் குருத்துகள் உருவாகும். நன்றாக வளராதக் கழிகளை இரண்டாவது ஆண்டில் வெட்டி அப்புறப்படுத்த வேண்டும். மூங்கில் தோட்டத்தில் ஏராளமான சருகுகள் கிடைக்கும். இது நிலத்தில் இயற்கை மூடாக்காக அமைந்து, ஈரப்பதத்தைப் பாதுகாப்பதால், ஏராளமான நுண்ணுயிர்கள் பெருகி நிலம் வளமாகும்.

நடவு செய்த ஐந்து ஆண்டுக்குப் பிறகு முதல் அறுவடையை ஆரம்பிக்கலாம். மூங்கிலை அறுவடை செய்யும் போது கவனமாக இருக்க வேண்டும். மூன்று ஆண்டுக்கு மேல் வயது கொண்ட கழிகளை மட்டுமே அறுடை செய்ய வேண்டும். இளம் வயதுள்ள கழிகளுக்கு அருகில்தான் குருத்துகள் வெளிவரும். முற்றியக் கழிக்கு அருகே குருத்து வராது. எனவே இளம் கழிகளை வெட்டக் கூடாது.

அடையாளம் அவசியம்!

புதிதாக ஒவ்வொரு ஆண்டும் குருத்து வெளிவந்து, அது இளம் மூங்கிலாகும் போது அதன் கணுக்களில் வெள்ளை உறை போல் தாள் ஒட்டிக் கொண்டு இருக்கும். அந்த உறை கீழே விழுந்ததும், கழிகளில் ஏதாவது ஒரு அடையாளம் இடவேண்டும். அடுத்தடுத்து ஒவ்வொரு ஆண்டும் வளர்ந்து வரும் இளம் மூங்கில்களிலும் இப்படி அடையாளம் இடவேண்டும். ஒரே மாதிரியான அடையாளமாக இல்லாமல், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒவ்வொரு விதமான அடையாளமாக இடுவது முக்கியம்.

நடவு செய்த ஐந்து ஆண்டுக்குப் பிறகு முதல் அறுவடை பிறகு, தொடர்ந்து மூன்று ஆண்டு இடைவெளியல் அடுத்தடுத்த அறுவடைகளைச் செய்யலாம். ஒரு குத்து மூங்கில்களில் இருக்கும் மொத்தக் கழிகளில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே வெட்டி எடுக்க வேண்டும். முதிர்ந்தக் கழிகள் குத்துக் உள்ளேயும், இளம் கழிகள் குத்துக்கு வெளியேயும் இருக்கும். அதனால் குதிரை லாடம் வடிவில் கழிகளை வெட்டி எடுக்க வேண்டும். அதாவது, ஆங்கில ‘யு’ (U) எழுத்து போல் வெட்ட வேண்டும். அப்போதுதான் குத்துக்குள் நுழைந்து வெட்டுவதற்கு வசதியாக இருக்கும். மூங்கில்களின் வயதைப் பொறுத்து மகசூல் கிடைக்கும். ஒவ்வொரு மூங்கில் குத்தில் இருந்தும் குறைந்தபட்சம் 10 முதல் 15 முதிர்ந்த மூங்கில்களை அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரில் இருக்கும் 200 குத்துகளில் இருந்து சராசரியாக, 2000 கழிகள் கிடைக்கும். ஒரு கழி, குறைந்தபட்சம் 50 ரூபாய் என விற்பனை செய்தாலும், ஒரு லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கும்.

ஏக்கருக்கு ஒரு லட்சம்!

மூங்கிலை ஒரு ஏக்கரில் பயிர் செய்திருக்கும் சிவகங்கை அருகேயுள்ள மதகுப்பட்டி நாமலூரைச் சேர்ந்த ரகுநாதன் என்ன சொல்கிறார் என்று பார்க்கலாம்.

“பத்து ஏக்கரில் விவசாயம் செய்பவர்கள் ஒரு ஏக்கரிலாவது மூங்கிலை நடுவது நல்லது. என் மண்ணு கொஞ்சம் களியான மண்ணு, அதனால், 2 அடி நீளம், அகலம், ஆழத்தில் குழியெடுத்து. குப்பை எரு, செம்மண் இரண்டையும் கலந்து குழியை நிரப்பி நடச் சொன்னாங்க. அவங்க சொன்ன மாதிரி 4 குழி மட்டும் எடுத்து மூங்கிலை நட்டுப் பார்த்தேன். அருமையாக வளர்ந்து வரவே நம்பிக்கை வந்தது. உடனே ஒரு ஏக்கர் நிலத்திலையும் நடவு செய்திட்டேன். 25 அடி இடைவெளி விட்டு நடவு செஞ்சதால், மொத்தம் 70 கன்னுங்களைத்தான் நட முடிந்தது.

பதினைந்து நாளுக்கு ஒரு முறை பாசனம் செய்கிறேன். நடவு செய்து 4 வருடமாச்சு. அருமையா வளர்ந்திருக்கு. இடைவெளி அதிகமா கொடுத்தால் ஒவ்வொரு குத்துலயும் 90 கழிக வரைக்கும் இருக்கும். அதில் 40 கழிகள் முத்தி இருக்கும். இன்னும் இரண்டு மாதத்தில் அறுவடை செய்யப் போகிறேன். ஒரு குத்திலிருந்து சராசரியா 2 ஆயிரத்துக்கு விற்றாலும் 70 குத்திலிருந்து ஒரு லட்சத்து 40 ஆயிரம் வருமானம் கிடைக்கும். இதுவரைக்கும் செலவு 15 ஆயிரம் ஆகியிருக்கும். எப்படியும் ஒரு ஏக்கரிலிருந்து ஒரு லட்ச ரூபாய்க்கு குறையாமல் லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

என்ன ரகுநாதன் சொல்வதைக் கேட்டதுமே உங்களுக்கும் நம்பிக்கை பிறக்கிறதல்லவா! நான்கூட குறைந்தபட்ச கணக்கைத்தான் போட்டுச் சொன்னேன். அவர் சொல்வதோ அனுபவக் கணக்கு. அதிலும், 70 குத்து மூங்கில்களில் இருந்தே, கூடுதல் லாபத்தை எடுக்க முடியும் என்கிறார். ஒரு ஏக்கரில் 200 குத்துகள் என்பதை விட , 70 குத்துகள் பராமரிக்கவும் எளிதாகத்தான் இருக்கும். வனத்துறையின் பரிந்துரை 200 கன்றுகள் தான், என்றாலும், விவசாயிகள் தங்களுக்கு தோதுபடும் வகையில் நடவை மேற்கொள்ளலாம்.

தற்போது, மூங்கிலுக்கான தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. உள்ளூர் மர வியாபாரிகள், பந்தல்காரர்கள், காகித ஆலை என்று தேடி வந்து வாங்கிச் செல்கிறார்கள். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வது தானே சரியான முடிவாக இருக்கும்.

**தொடர்புக்கு:**

ரகுநாதன்.

அலைபேசி : 94865 – 61773.

---

ஆதாரம் : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 10.4.11